அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை




புரட்டாதி 2011
ISSN 1837-6460
மலர் 3 இதழ் 9

# அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் 2வது ஆண்டுப் பொதுக்கூட்டம்

அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் 2வது ஆண்டுப் பொதுக்கூட்டம் கடந்த 17.09.2011 சனிக்கிழமை நடைபெற்றது. அவுஸ்திரேலியாவில் சனநாயக ரீதியில் அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து தேசிய மட்டத்தில் அமைக்கபட்ட ஒரே ஸ்தாபனம் என்ற பெருமையுடன், அவுஸ்திரேலிய தமிழர் பேரவை இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளமை மிகப் பெரிய சாதனை ஆகும்.

வருடாந்தப் பொதுக்கூட்ட நிகழ்வுகள் மாலை 6.15 மணிக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகியது. முதலில் நியூ சவுத் வேல்ஸ் மாநில பேரவையின் ஆண்டுப் பொதுக்கூட்டமும், தொடர்ந்து தேசிய பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. திரு நிர்மலேந்திரன் அவர்கள் கூட்ட நிகழ்வுகளை நெறிப்படுத் தினார்.

நியூ சவுத் வேல்ஸ் மாநில பேரவையின் தலைவர் திரு மனோகரன் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அவர் தனது உரையில் அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் அவசியத்தினை விபரித்துக் கூறியதுடன், கடந்த ஆண்டில் சிறப்பாக பணியாற்றிய செயற்குழு உறுப்பினர்களுக்கு நன்றி கூறினார்.

தொடர்ந்து நியூ சவுத் வேல்ஸ் மாநில பணிப்பாளர் கலாநிதி கௌரிபாலன் தங்கள் மாநில செயற்பாடுகளின் சாதனைகளை விளக்கிக் கூறியதுடன், தமிழர் பேரவையின் செயற்பாடுகளை தமது ஊடகங்களின் மூலம் மக்கள் மத்தியில் அறிமுகப் படுத்திய பிரச்சார நடவடிக்கை களுக்காக இன்பத் தமிழ் ஒலி, தென்றல் ஆகியவற்றுக்கு நன்றி தெரிவித்தார்.

அடுத்து அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் தவிசாளர் கலாநிதி ராஜ் ராஜேஸ்வரன் அவர்கள் உரையாற்றினார். அவர் தனது உரையில் தமிழர் பேரவை மீது நம்பிக்கை வைத்து எம்முடன் இணைந்து, எமது செயற்பாடுகள் மூலம் குறித்த இலக்குகளை நோக்கி ஏறுநடை போடுவதற்கு உறுதுணையாக இருந்த பேரவையின் அங்கத்தவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். அத்துடன் அங்கத்தவர்களின் பூரண ஒத்துழைப்பின் மூலம் தான் பல்வேறு பணிகளையும் சிறப்பாக செய்து முடிக்கக் கூடியதாக இருந்தது என்றும் குறிப்பிட்டார். மேலும் அவர் தனது உரையில் இது நாள் வரையிலான எமது செயற்பாடுகள் பற்றி நாம் பெருமிதமடைந்தாலும், நாம் எதிர்நோக்கியுள்ள பெரிய அளவிலான எமது செயற்திட்டங்களை, அனைவரது கடும் உழைப்பு, ஒத்துழைப்பு, தியாக மனப்பான்மை ஆகியவற்றுடன் முழுமனதுடன் பணியாற்றி எம்மக்களை வாழ்விக்க வழிவகுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.




கலாநிதி. ராஜ். த. ராஜேஸ்வரன்

தொடர்ந்து பேரவையின் செயலாளர் திரு இளங்குமரன் அருளையா தனது அறிக்கையினை சமர்ப்பித்தார். அவர் தனது உரையில் பேரவையின் ஆரம்பநிலை செயற்பாடுகள், இயக்குனர்கள் சபை, நிறவேற்றுக் குழு, அங்கத்தவர்கள் அபிவிருத்திக் குழு, சட்டவரைவுக் குழு ஆகியன நிறுவப்பட்டவை பற்றி விளக்கிக் கூறினார். 30 ஜுன் 2011ல் முடிவடைந்த நிர்வாக காலப்பகுதியில் 25 தடைவைகள் இயக்குனர்கள் சபை, நிறவேற்றுக் குழு ஆகியவற்றின் கூட்டங்கள் நடைபெற்றன எனவும், கூட்டங்கள் யாவும் தொலைத் தொடர்பு இணைப்புகள் மூலமே நடைபெற்றதாகவும் கூறிப்பிட்டார்.

தொடர்ச்சி 2 ம் பக்கம்

# அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் 2வது ஆண்டுப் பொதுக்கூட்டம்

...தொடர்ச்சி

பேரவையில்சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப் பிரேரணைகளுக்கு எதுவித எதிர்ப்புகளும் கிடைக்கப் பெறாத நிலையில், திருத்தப் பிரேரணைகள் யாவும் சபையினரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டதாக பேரவையின் தெரிவத்தாட்சி அலுவலர் சபையில் அறிவித்தார்.

தொடர்ந்து பேரவையின் பொதுசனத் தொடர்பு நிறைவேற்று அலுவலர் வைத்திய கலாநிதி சாம்பவி அவர்கள் தமது குழுவின் அறிக்கையினை பொதுச் சபையில் சமர்ப்பித்தார். அவர் தனது உரையில், பொதுசன தொடர்பாடல் குழு தமது ஆரம்ப காலத்தில் எதிர்நோக்கிய புதிய சவால்களை கையாள்வதற்கு மூன்று முக்கிய இலக்குகளை நிர்ணயித்ததாக குறிப்பிட்டார்.

- ஸ்ரீலங்கா அரச பிரச்சார பீரங்கிகளால், அவுஸ்திரேலியா வாழ் தமிழர்கள் மீதும், தமிழ் அகதிகள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட விஷமத்தனமான பிரச்சார நடவடிக்கைகளுக்கு, எதிர் நடவடிக் கைகள் மேற்கொள்வது.
- ஸ்ரீலங்காவில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச சுயாதீன நீதிவிசாரணை கோரி செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- இலங்கை வாழ் தமிழ் மக்கள் இன்னல்களை நீக்கும் வகையில் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றிற்கான அரசியல் முன்நகர்வுகளை மேற் கொள்ளல்.



வைத்தியர். சாம்பவி

கடந்த வருடங்களில் தமிழர் பேரவையின் அர்ப்பணிப்புடனான காத்திரமான செயற் பாடுகள் மூலம் பல சவால்களை வெற்றிகரமாக சமாளித்து முன்னேறி வந்துள்ளதாகவும், தொடர்ந்து இங்குள்ள அரசியல்வாதிகளினதும், ஊடகங்களினதும் நன்மதிப்புகளையும் பெற்றுவருகின்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வைத்திய கலாநிதி சாம்பவி அவர்கள் தனது பேச்சின் முடிவில், எமது நீதிக்கான நீண்ட பயணம் மிகவும் கடினமானது, பல்வேறு நெருக்கடிகள் நிறைந்தது, ஏமாற்றம் நிறைந்தது - ஏன் வஞ்சிக்கப்படும் நிலைகூட ஏற்படலாம். ஆனால் நாம் ஒரு சமூகமாக ஒன்றிணைந்து எமது இறுதி இலக்கினை நோக்கி ஏறநடை போட்டால் எமது பயணம் நிச்சயம் பலன் தரும் என்று கூறி முடித்தார்.

தொடர்ந்து பேரவையின் அகதிகள் நலன்களுக்கான நிறைவேற்று அலுவலர் கலாநிதி பாலா விக்னேஸ்வரன் அவர்கள் உரையாற்றுகையில், தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் தமக்கான குடிவரவு ஆலோசனைகள், சட்ட உதவிகள், மொழிபெயர்ப்பு, உரிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளுதல், செய்தி தொடர்புகள் போன்ற விடயங்களை பெற்றுக் கொள்வதில் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் பலர் உளரீதியாகவும், உடல்நிலை தொடர்பாகவும் பல இன்னல்களை அனுபவித்து வருவதாகவும். இன்னும் பலர் ஸ்ரீலங்கா விலிருந்து நெருக்கடியான காலங்களில் தப்பிவந்தபோது ஏற்பட்ட உடல்ரீதியாகவும், உளரீதியான தாக்களிலிருந்து இன்னும் விடுபட முடியாமல் தவிப்பதாகவும் கூறினார். இத்தகைய நிலையில் பல பெண்களும் சிறுவர்களும் இருப்பதாகவும் தெரிவித்தார்.




கலாநிதி பாலா. விக்னேசஸ்வரன்

கலாநிதி பாலா விக்னேஸ்வரன் அவர்கள் தனது உரையின் முடிவில் இந்த மக்களின் விடிவுக்காக எமது அர்ப்பணிப்புடன் கூடிய எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, தன்னார்வமுள்ள பல தொண்டர்களின் சேவை எமது பேரவைக்கு மிகவும் அவசியம் தேவையாக உள்ளது என கூறி முடித்தார்.

அடுத்து தமிழர் பேரவையின் தேசிய நெறிமுறை திட்டக்குழுவின் அறிக்கையினை அக்குழுவின் நிறைவேற்று அலுவலர் சமர்ப்பித்தார். அவர் தனது

தொடர்ச்சி 3 ம் பக்கம்

# அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் 2வது ஆண்டுப் பொதுக்கூட்டம்

...தொடர்ச்சி




திரு. மனோகரன்

உரையில் பேரவையின் சாதனைகளை விபரமாக எடுத்துக்கூறியதுடன், அவுஸ்திரேலியாவிலும் உலகலாவியரீதியிலும் நிலவும் தற்போதைய அரசியல் சூழ்நிலைகளை விளக்கினார்.

அவர் அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் சாதனை-களை பின்வருமாறு வகைப் படுத்தினார்:




## திரு நிர்மலேந்திரன்

அவுஸ்திரேலிய தமிழர் பேரவையானது இங்கு தமிழ்மக்களை பிரதிநிதிப்படுத்தும் முக்கியமான, நம்பத்தகுந்த ஸ்தாபனம் என்ற நன்மதிப்பை பெற்றுள்ளது. பல உறுப்பினர்கள் தங்கள் பாராளுமன்ற உரைகளில் தமிழர் பேரவையின் செயற்பாடுகளை குறிப்பிட்டுள்ளனர். பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பாராட்டுச் செய்திகளை எமதுபேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு வழங்கி உள்ளனர்.

பல தரப்பட்ட அரசியற் பிரமுகர்கள், முக்கிய அரசாங்க அதிகாரிகள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் உடன் மிக நெருக்கமான நல்லுறவை பேணி வந்துள்ளோம்.

ஊயர்மட்ட அரச தரப்பினருடனும், எல்லா அரசியல் கட்சிகளுடனும் தமிழர் தொடர்பான விடயங்களில் ஆணித்தரமாக கருத்துத் தெரிவிப்பதற்கான ஆளுமையை வளர்த்துள்ளோம்.




## கலாநிதி கௌரிபாலன்

தாயக மண்ணில் எமது மக்களினால் தெரிவு-செய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்தி எமது அரசியல் முன்னெடுப்புகளை மேற் கொள்வதுடன் அங்குள்ள கள நில-வரங்களிலும்கவனம் செலுத்துகிறோம்.

உலகத் தமிழர் பேரவையினருடன் ஒன்றிணைந்து, சர்வதேசரீதியில் இந்தியா உட்பட பல வல்லரசு நாடுகளுடனும், சிறிய நாடுகள் மத்தியிலும் அரசியல் முன்னெடுப்பபுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் நிறைவேற்றுக் குழுவினர், பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்ட நிகழ்வுகளை ஒலிப்பதிவு செய்து, இங்கு நேரில் வரமுடியாத மக்களும் பேரவையின் நிகழ்வுகளை அடுத்த செவ்வாய் கிழமை இரவு தனது நி-கழ்சிகளில் மறுஒலிபரப்பு செய்யவுள்ள **இனபத் தமிழ் ஒலி** வானொலி நிர்வாகத்தினருக்கு தமது நன்றிகளைத் தெரிவித்தனர்.

♦

## மேற்கு அவுஸ்திரேலிய மாநில அறிக்கை

நடந்து முடிந்த வருடாந்தப் பொதுக் கூட்டத் தீர்மானத்திற்கமைய, எமது மாநில பேரவையின் முதலாவது செயற்குழுக் கூட்டம், கடந்த 4.09.2011 காலை 10.00 மணிக்கு தமிழ் சங்கத்தில் நடைபெற்றது. தொடர்ந்து 11.00 மணிக்கு பொதுசபைக் கூட்டமும் இடம்பெற்றது.

வருடாந்த பொதுக்கூட்ட முடிவின்படி எமது மாநில செயற்குழு திரு கீரன் அவர்களை மேற்கு மாநில அவையின் செயலாளராக நியமனம் செய்தது. தொடர்ந்து ஒக்டோபர் மாத இறுதியில் இங்கு பேர்த் நகரில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்களின் மாநாடு தொடர்பான எதிர்ப்பு அணி நிகழ்வில் பங்குபற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இங்குள்ள 20 அமைப்புகள் ஒன்றிணைந்து செயற்படுத்தவுள்ள CHOGM எதிர்ப்பு அணி தொடர்பான போதிய விபரங்களை http://www.chogmprotest.org எனும் இணைய தளத்தில் பார்வையிடலாம். இந் நிகழ்வு தொடர்பான குழுவின் ஆரம்ப கூட்டங்களில் எமது பிரதிநிகளும் பங்குபற்றியிருந்தனர்.

பேர்த்தில் நடைபெறவுள்ள CHOGM எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட ஏனைய மாநிலங்களில் உள்ள உணர்வாளர்கள் பங்குபற்ற ஆர்வம் காட்டிவருகின்றனர். இதற்கு வருகைதரும் அனைவரும் பேர்த் நகரில் இதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் சுயாதீன அமைப்புடன் இணைந்து ஒரே பேரணியாக இணைந்து செயற்படுவது விரும்பத்தக்கது. இந்த சுயாதீன அமைப்பானது ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், இனப்படுகொலைகளுக்கு எதிராக குரல் கொடுப்பதுடன், ஸ்ரீலங்காவினை பொதுநலவாய நாடுகளின் அமைப்பிலிருந்தும் இடைநிறுத்த வேண்டும் என்றும் தொடர்ந்து குரல் கொடுக்கும்.

எமது மாநில பேரவையின் பொதுக் கூட்டத்தில், எமது பேரவையும் உலகத் தமிழர் பேரவையும் இணைந்து சர்வதேச கருத்தரங்கு ஒன்றினை பேர்த் நகரில் நடாத்தி இந்த மகாநாட்டிற்கு விசேட செய்தியினை வழங்குவது பற்றி ஆராயப்பட்டது. ஆனால் இந்த சர்வதேச கருத்தரங்கு தற்போது சிட்னி நகரில் நடாத்துவதற்கு முடிவாகியுள்ளது. ♦

## அலரி மாளிகையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், மீண்டும் வவுனியா தடுப்பு முகாமில் அடைப்பு

அனைத்துலக இராஜதந்திரிகள் மத்தியில் அலரிமாளிகையில் வைத்து சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவினால் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட, 1800 முன்னாள் போராளிகளும் மீண்டும் வவுனியா தடுப்பு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வவுனியா தடுப்பு முகாம்களில் புனர்வாழ்வு பெற்ற 1800 முன்னாள் போராளிகளை சிறிலங்காஅதிபர் மகிந்த ராஜபக்ச நேற்று முன்தினம் விடுதலை செய்திருந்தார்.

முன்னாள் போராளிகளை விடுவிக்கும் இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 30 முன்னாள் போராளிகள் மட்டுமே பெற்றோரிடம் கையளிக்கப்பட்டனர். அதற்கென 30 பெற்றோர் மட்டும் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் சிறிலங்கா அதிபரால் கையளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், வீடுகளுக்கு அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று அவர்களது பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்ட எவரையுமே பெற்றோர்களுடன் வீடுகளுக்குச் செல்வதற்கு சிறிலங்கா அரச அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. சிறிலங்கா இராணுவ அதிகாரிகளால் அவர்கள் மீண்டும் பேருந்துகளில் ஏற்றி வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (மேலும்)

## பொதுசனத் தொடர்பாடல் குழுவின் அறிக்கை

இம்மாதம் கிறீன்ஸ் கட்சியினரால் மத்திய பாராளுமன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு நிகழ்விற்கு எமது தமிழர் பேரவையினரும் அழைக்கப்பட்டிருந்தனர். இந்த நிகழ்வானது ஸ்ரீலங்காவின் போர்குற்றங்கள் தொடர்பிலான சுயாதீன விசாரணைக் கமிஷன் அமைக்கபட வேண்டியதின் அவசியத்தினை மேலும் வலுப்படுத்தும் வகையில் **செனட்டர் லீ றிஹானன்** அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



**கருத்தரங்கில் பங்குபற்றியோர் விபரம்:**

- கிறீன்ஸ் கட்சி செனட்டர் லீ றினஹான்.
- வைத்திய கலாநிதி சாம்பவி - ஆஸி. தமிழர் பேரவை
- மதிதகு ஜோன் டோவ்ட் - AO, Q.C, சர்வதேச ஜூரிகள் சபை அவுஸ்திரேலிய தலைவர்
- பேராசிரியர் ஜேக் லிஞ்ச் பணிப்பாளர், சமாதானம் - பிணக்குகள் கற்கைநெறி நிலையம், சிட்னி.
- கலாநிதி பென் சால் - சர்வதேச சட்டத்துறை பேராசிரியர், சட்டநெறி நிலையம் சிட்னி.
- திரு பீற்றர் ஆடன்ற்இ நிறைவேற்று அதிகாரி, பிறிஸ்பன் கத்தோலிக்க நீதிக்கும் சமாதானத்துக்குமான சபை.

அவுஸ்திரேலியாவில் உள்ள பொது ஸ்தாபனங்கள் இணைந்து இத்தகைய வேண்டுகோள் விடுப்பது இதுவே முதல் தடவை.

இந்த நிகழ்வு தொடர்பாக இங்குள்ள ஊடகங்களில் முக்கிய செய்திகள் வெளியாகின. குறிப்பாக ABC, SBS ஆகிய வானொலிகள் ஆகியவற்றுடன் The Australian, AAP ஆகியனவும் செய்திகள் வெளியிட்டன.

சர்வதேச ரீதிதியில் BBC, **தமிழ் நெட்** ஆகியன செய்திகள் சேகரித்தன. வைத்திய கலாநிதி சாம்பவி ஊடகவியலாளர் மத்தியில் வழங்கிய அறிக்கையினை இணைய தளத்தில் பார்வையிடலாம்.♦

## நியூ சவுத் வேல்ஸ் மாநில அறிக்கை

எமது கிளையின் பிரதிநிதிகள் பல தொழிற்கட்சி கிளைகளுடன் இணைந்து பிரச்சார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதன் பிரதிபலனாக சில கிளைகளின் கூட்டத்தில் எமக்குச் சார்பான தீர்மானங்களை எகமனதாக ஏற்றுக் கொள்ளபட்டுள்ளது. இலங்கை அரசின் போர்க்குற்றங்களை விசாரிக்க ஒரு சர்வதேச விசாரணை நடாத்துவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் அறை கூவல் விடுக்க வேண்டும் என்பது இந்த் தீர்மானங்களின் கருப்பொருளாக அமைந்திருந்தது.

இன்னும் பல கிளைகளின் கூட்டத்தில் எமது மக்களின் பிரச்சனைகளையும் அதற்கான தீர்வுகளையும் ஆராய எமது கிளையின் பிரதிநிதிகளிற்கு அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது.♦

# அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை



*Postal Address:*
*P.O. BOX 22 COMO WA 6952 AUSTRALIA*
*Tel: 1300 660 629*
*Web: http://www.australiantamilcongress.com*

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரே அரசியலில் ஆர்வம் காட்டிவந்திருக்கின்றார்கள். அவர்களும் தனித்தனியாகவே செயற்பட்டு வந்துள்ளார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் முயற்சிகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதுவரை காலமும் அமைதியாக இருந்த மக்களையும், இளஞ்சந்ததியினரையும் அரசியலில் ஈடுபட வைத்து எமது தமிழ்ச் சமூகத்தின் ஒருங்கிணைந்த நோக்கத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுவது எமது கடமை.

அவுஸ்திரேலிய தமிழ் பேரவை பல அரசியல் வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது, எமது அமைப்பினரின் நோக்கம் நிறைவேறுவதற்க்கு எமது பேரவையின் அங்கத்துவர்களின் எண்ணிக்கையும், பொருள் பலமும் முக்கியமானது என்பது மறுக்கவோ, மறைக்கமுடியாத உண்மை. அதனால் உங்கள் ஒவ்வொருவரையும் எமது பேரவையில் இணைந்து எம்மைப் பலப்படுத்தும்படி வேண்டி நிற்கின்றோம். எமது பேரவையின் எதிர்காலத்தை வழி நடத்தும் பொறுப்பு ஒவ்வொரு அங்கத்தவர்களின் கைகளிலும் உள்ளது.

உங்களது உதவி சிறியதாகவோ பெரியதாகவோ இருப்பினும் எமது நீண்ட கால, இடைத்தர கால, குறுகிய கால குறிக்கோள்களை அடைவதற்கு மிக முக்கியமானது.

நீதிக்காகவும் அமைதிக்காகவும் நாம் தொடங்கிய பயணத்தில் உங்களையும் உங்களது நண்பர்களையும் உறவினர்களையும் இணைத்துக் கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

எமது தேசிய சஞ்சிகைக்கான கட்டுரைகள் செய்திகளை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

**newsletter@australiantamilcongress.com**

பொறுப்பு **மறுப்பு**

இந்த வெளியீட்டில் வரும் கட்டுரைகள், ஆக்கங்கள் அனைத்தும் அவுஸ்திரேலியத் தமிழர் பேரவையின் கொள்கைகளையோ நோக்கங்களையோ பிரதிபலிப்பனவல்ல. அவை அந்தந்த எழுத்தாளர்களின் கருத்துக்களை பிரதிபலிப்பனவாகவே இருக்கும்.

## அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை:
## சமாதானத்தையும் நீதியையும் நோக்கிய அறப்போர்

**எம் கொள்கை**

“மக்களால் மக்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட மக்களின் பேரவையே அவுஸ்திரேலியத் தமிழ் பேரவையாகும். எமது கொள்கையானது நீதியையும் சமாதானத்தையும் அடிப்படையாக வைத்து எமது மக்களின் வளமான, சுதந்திரமான, சமத்துவமான, பாதுகாப்பான அமைதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமது மக்களின் ஒருங்கிணைந்த குரலாக ஒலிப்பதுவாகும்.”

**எம் இலட்சியம்**

“அவுஸ்திரேலியத் தமிழ் பேரவை அவுஸ்திரேலிய சமூகத்தில் அங்கம் வகிக்கும் தமிழர்களின் ஆக்க பூர்வமான பங்களிப்பை ஊக்குவிப்பதாகவும், தமிழர்களுக்கு முக்கியானஆற்றை வெளிக் கொணர்வதாகவும், அவுஸ்திரேலியப் பண்புகளை நிலைநிறுத்துவதாவும், மற்றைய சமூகங்கள், அரசுகள், அமைப்புக்கள் அனைத்தையும் தமிழர்களின் சமூக, பண்பாட்டு, அரசியல் அக்கறைகள், கவலைகளில் ஈடுபடுத்துவதாகவும் அமைவதே எம் இலட்சியம்.”

**எம் குறிக்கோள்**

“எமது குறிக்கோளானது உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காகக ஒருங்கிணைந்த குரல் கொடுப்பது, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றிய அறிவியலை மக்களிடையே ஏற்படுத்துவது, எமது மக்களின் பாதுகாப்பிற்கும், வளமையான வாழ்விற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது, எமது எதிர்கால சந்ததியினரிற்கு எமது நாட்டில் நடந்த இனப்படுகொலையைப் பற்றி எடுத்துக்கூறுவது என்பவையாகும்.”